வறட்சியான மாவட்டங்கள் என்ற அடிப்படையில் அந்தப் பின்தங்கிய பகுதிகளுடைய மேம்பாட்டிற்கு அரசு அதிக உதவி செய்ய வேண்டும். ஏனென்றால், அது மா விற்பனைக்கும், ஏற்றுமதிக்கும் ஏதுவாக இருக்கக்கூடிய பகுதியாகவும் இருக்கிறது. அங்கு தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. ஏற்றுமதி மையத்திற்கு சென்னை அல்லது பெங்களூரு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினாலே விற்பனை மையத்தையும், ஏற்றுமதி மையத்தையும் அந்த இரண்டு மாவட்டங்களின் மையப் பகுதியில் துவங்கினால் சிறப்பாக இருக்கும்.

முற்பகல் *9—40*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாம்பழத்திற்குப் பிரசித்தி பெற்ற பகுதியாக இருக்கின்ற பெண்ணாகரத்திலே அப்படிப்பட்ட ஏற்றுமதி மையத்தை அமைத்து, விவசாயிகளின் துயர் துடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே சொன்னதைப்போல, மா உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலே விவசாயிகளுக்கு இப்பொழுது ஆர்வம் குறைந்து வருகிறது என்பது உண்மைதான். ஆகவே, அங்கு தனியாகத் தொழிற்சாலை தொடங்க வழி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

22—

சார்பு நீதிமன்றம்

***63515—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை, அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 7]

கபிலர்மலை தொகுதி, பரமத்தியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப, பரமத்தியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தை அமைத்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், 13—வது கூட்டத் தொடரில் மாற்றுத் தலைவர்களில் ஒருவராக என்னை நியமித்த தங்களுக்கும், எங்களது கட்சியினுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், எங்களது கொறடா அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்ற வேளையிலே, பரமத்திவேலூர் வட்டம், பரமத்தியிலே அமைந்திருக்கின்ற அந்த நீதிமன்றத்திற்கு உட்பட்ட 700—க்கு மேற்பட்ட வழக்குகள் நாமக்கல்லிலே இருக்கின்ற சார்பு நீதிமன்றத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கும், இதற்கும் இடையிலே 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. பெரும்பாலான வழக்குகள் விவசாயிகள் சம்பந்தப்பட்டவையாக இருக்கும். எனவே, பரமத்தியிலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டால் எங்கள் பகுதி மக்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். உயர் நீதிமன்றத்திலிருந்து இதற்குப் பரிந்துரை வந்திருக்கிறது என்று கேள்விப்பட்டேன். எந்த அளவிற்கு அது உண்மை என்று தெரியவில்லை. அங்கு சார்பு நீதிமன்றம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டும்போது அரசு சில நேரங்களில் இந்த இடத்திலே கட்டலாம் என்றுகூட முடிவு எடுக்கலாம். ஆனால், நீதிமன்றங்களைப் புதியதாக ஆரம்பிப்பது என்பது முழுக்க, முழுக்க High Court—னுடைய purview—ல்தான் வருகிறது. ஒரு Sub-Court ஆனாலும் சரி, D.M. Court ஆனாலும் சரி, Fast Track Court ஆனாலும் சரி, Labour Court ஆனாலும் சரி, இந்த நீதிமன்றத்தை இந்த இடத்திலே ஆரம்பிக்கலாம், Case pendency இவ்வளவு இருக்கிறது, ஆகையினாலே இது தேவைப்படுகிறது என்று முடிவு எடுப்பது உயர் நீதிமன்றம்தான். உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது எனக்குத் தெரியாது. ஒருகால் அவர் பின்னாலேயே போய் தெரிந்துகொண்டிருக்கலாம். இந்த இலாகாவினுடைய மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னால்தான் எந்த, எந்த ஊர்களிலே நீதிமன்றங்களை ஆரம்பிப்பது என்ற பரிந்துரை எங்களுக்கு உயர் நீதிமன்றத்திலிருந்து வந்து சேரும். அப்படி வந்தால் அது குறித்து அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் மிகவும் பழமையான கட்டடத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் ரொம்ப மோசமாக இருந்தால், அதை மூலக் கேள்வியாக்கி இருக்கலாம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை அரசு கவனத்தில் கொள்ளும்.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான திருவெறும்பூரைத் தனி வட்டமாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதைப் புதிய தாலுகாவாக அறிவித்து நமது மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் அதைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

அதற்கு முதலிலே எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 9—45

அடுத்து, இப்போது புதிய வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தத் திருவெறும்பூருக்கு நீதிமன்றங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையும் நமது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா, உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் அமைத்திட நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே தெரிவித்ததைப்போல், புதிய நீதிமன்றங்களை உருவாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலேயிருந்து வருகின்ற கோரிக்கைகளை இன்னின்ன உறுப்பினர்கள் இதைக் கேட்டிருக்கிறார்கள் என்று அரசு தொகுத்து உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பும்; அவற்றை உயர் நீதிமன்றம்தான் ஆய்வு செய்து இந்த இடத்திலே தொடங்கலாம், இங்கு தொடங்க வேண்டிய அவசியமில்லை, case pendency கிடையாது, ஆகையினாலே இந்த இடத்திலே தொடங்கலாம், இந்த இடத்திலே தொடங்கக் கூடாது என்று முடிவு எடுக்கக்கூடியது உச்ச நீதிமன்றம்தான். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும்.

[2010 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கிட்டத்தட்ட 340 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை வழங்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றில் ஒன்றாக, திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரிலே புதிய சார்பு நீதிமன்றத்திற்கும் அனுமதி அளித்து, திறக்கப்பட்டுள்ளதோடு அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்கு சுமார் 6 கோடி ரூபாய் நிதி தந்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா அல்லது சார்பு நீதிமன்றத் திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழா போன்ற சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் ஆகியோர் வருகை தந்து அவற்றைத் திறக்கிறார்கள். அப்படி வருகின்ற சமயங்களில் அத்தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அழைப்பிதழிலும் இடம் பெறுவது இல்லை, மேடையிலும் அவர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்படுவது இல்லை. இந்த நிலை அங்கேயிருக்கிற மக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞருடைய நல்லாட்சியில், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 15 தினங்களுக்கு முன்னால் வள்ளியூரிலே நடைபெற்ற ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவில்—அது ராதாபுரம், நாங்குநேரி இரண்டுக்கும் பொதுவானது—இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களும், அதேபோன்று நெல்லை நாடாளுமன்ற உறுப்பினருடைய பெயரும் அழைப்பிதழில் குறிப்பிடப்படவில்லை, இருக்கைகளும் ஒதுக்கப்படவில்லை. இதுபோல் வருங்காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை அல்லது எண்ணத்தை நான் பலமுறை பல நீதிமன்ற விழாக்களில் பிரதிபலித்திருக்கிறேன், இந்த அவையிலும் நான் தெரிவித்திருக்கிறேன். நான் இங்கே பேசியதற்காக ஒரு வழக்குகூட என்மீது தொடுக்கப்பட்டது. நாம் கருத்தைத் தெரிவிக்கலாம்; இந்திய அரமைப்புச் சட்டப்படி நீதிமன்றம், Legislature, Executive இவையெல்லாம் தனித் தனி அமைப்புகள். யாரையும் நாம் compel செய்ய முடியாது. ஆனால், நம்முடைய கருத்தைப் பலமுறை மாண்புமிகு நீதியரசர்களை வைத்துக்கொண்டே பல மேடைகளிலே நான் பேசியிருக்கிறேன், பத்திரிகையிலே வந்திருக்கிறது, இந்த அவையிலும் பேசியிருக்கிறேன்; இந்த அவையிலே நான் பேசிய ஒரு வார்த்தைக்காக என்மீது வழக்கு தொடுக்கப்பட்டு அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் மாண்புமிகு உறுப்பினருடைய அந்த உணர்வில் நான் ஒன்றியிருக்கிறேன். நான் இப்போதும் மாறுபடவில்லை. இன்றைக்குச் சொல்லப்பட்ட இந்தக் கருத்தும் இதன்மூலம் உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களுடைய கவனத்திற்குப் போக வேண்டும். அவர்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை இந்த அவையின் சார்பாகவேகூட நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஒன்று; சட்டப்படி மேடையிலே ஏறி ஓர் உறுப்பினர் உட்காருவதாக இருக்க வேண்டுமே தவிர, அவர்கள் அழைக்காமலே அத்துமீறி மேடையிலே ஏறி பேசுவது நமக்கும் நாகரிகம் அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) It is over. We have gone to the next question. அனுமதியில்லை.